

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.2.2026) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அகரம், ஜெகநாதன் தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்பட்டுள்ள கொளத்தூர் இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையக் கட்டட வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 6 நியாய விலைக் கடைகளை திறந்து வைத்து, மக்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.ஆர். பெரியகருப்பன், மா. சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.2.2026) கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில் 248 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி.ஆர்.பிரியா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.




"தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரையில் காஞ்சி தெற்கு மாவட்டம், மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் சிறப்புரையாற்றினார். உடன் மண்டலப் பொறுப்பாளர் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., நகரக்கழகச் செயலாளர் கு. குமார் மற்றும் கழக முன்னணியினர் பங்கேற்றனர்.

# சென்னை- விழுப்புரம் மண்டலத்திற்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

## ஆ.இராசா எம்.பி. - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!





சென்னை - விழுப்புரம் மண்டலத்திற்குட்பட்ட மாவட்ட கழகச் செயலாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் நாளை (05.02.2026 வியாழக்கிழமை) மாலை 04.00 மணியளவில் **செங்கல்பட்டு மாவட்டம் (மாமல்லபுரம் அருகில்) திருவிடந்தையில்** நடைபெறும்.

இக்கூட்டத்தில் சென்னை - விழுப்புரம் மண்டலத்திற்குட்பட்ட அனைத்து மாவட்ட கழகச் செயலாளர்களும் கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**பொருள்** : கழகத்தலைவர் அவர்கள் தலைமையில் 11.02.2026 அன்று செங்கல்பட்டு மாவட்டம் (மாமல்லபுரம் அருகில்) திருவிடந்தையில் நடைபெற உள்ள வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் உறுப்பினர்கள் (BLA2, BLC, BDA, BYO) சந்திப்புக் கூட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை

**ஆ.இராசா எம்.பி.**
கழக துணைப்
பொதுச் செயலாளர்

**எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
அமைச்சர் - செயலாளர்
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க

### நாளை நடைபெறுகிறது!

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

காஞ்சிபுரம்,பிப்.4,

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாளை (05.02.2026 வியாழக்கிழமை)காலை 10.00 மணியளவில் காஞ்சிபுரம் அடுத்த கீழம்பி, ஏ.ஜெ.எஸ். மகாலில் மாவட்ட கழக அவைத் தலைவர் ச.இனியரசு தலைமையிலும் மாவட்ட துணைச் செயலாளர்கள் ஓ.எஸ்.தினகரன், க.செல்வம் எம்.பி., கு.மலர்விழி, மாவட்ட பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம் முன்னிலையில் நடைபெற உள்ளது.



எனவே இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர். தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர - ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில , மாவட்ட நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் படிகேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. கழக தலைவர், தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழா.

2. வெல்லும் தமிழ் பெண்கள் மகளிர் தேர்தல் பரப்புரை.

3. பிப்-11, திருவிடந்தையில் என் வாக்குச்சா வடி வெற்றி வாக்குச்சாவடி BLA2, BDA, BLC. கூட்டத்தில் பங்கேற்பது.

4. பிப்-14. சென்னையில் தேர்தல் அறிக்கை சம்மந்தமாக கூட்டத்தில் பங்கேற்பது.

5. தமிழ்நாடு தலைகுனியாது பிப்16. 17. 18. சட்டமன்ற தொகுதி வாரியாக தேர்தல் பரப்புரை.

6. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்து;ளளார்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பூண்டி மேற்கு ஒன்றியம் எல்லப்பநாயுடு பேட்டை புதூர் ஊராட்சி கிளை செயலாளர் முருகன் அவர்களின் தாயார் கம்சலாமணி மருத்துவ செலவிற்காக திமுக இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் ரூ. 25,000 மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன்,எம்.எல்.ஏ. திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன், ஆகியோர் வழங்கினார்கள். உடன் ஒன்றிய பொறுப்பாளர் தா.மோதிலால், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம.கிரண், பொதுக்குழு உறுப்பினர் பா.சிட்டிபாபு உள்பட பலர் உள்ளனர்

